**செய்தி வெளியீடு எண்:738** **நாள்: 02.11.2017**

<u>செய்தி வெளியீடு</u>

**<u>வடகிழக்கு பருவமழை நிவாரணப் பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர்கள் நியமனம் மற்றும் நிவாரணப் பணிகளை துரிதப்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலைமையில் இன்று (2.11.2017) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தொடங்கியதையொட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும், பருவமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், மேற்கொள்ளப்பட வேண்டிய நிவாரணப் பணிகள் குறித்தும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் பொருட்டு, முன்னெச்சரிக்கை மற்றும் மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள 8.9.2017, 9.10.2017 மற்றும் 24.10.2017 ஆகிய நாட்களில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதில் அரசு உயரதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை உயர் அதிகாரிகள், உள்ளாட்சித்துறை அதிகாரிகள் ஆகியோர் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றி விரிவாக அறிவுறுத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் 27.10.2017 அன்று முதல் வடகிழக்கு பருவமழை தொடங்கி தீவிரமடைந்துள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பருவமழையால் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு சென்று, அவர்களுக்கு தேவையான, உணவு, குடிநீர் மற்றும் மருத்துவ வசதிகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பேரிடர் காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களை தங்க வைக்க ஏதுவாக கடலோர மாவட்டங்களில் 115 பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

**மேலும், மீட்புப்பணிகளை ஒருங்கிணைக்கவும், போர்கால அடிப்படையில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும், அந்தந்த மாவட்ட அமைச்சர்களுடன் மூத்த இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள் அனைத்து மாவட்டங்களுக்கும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.** பெருநகர சென்னை மாநகராட்சியின் 15 மண்டலங்களுக்கும் மூத்த இந்திய ஆட்சிப்பணி அலுவலர்களை ஒருங்கிணைப்பாளர்களாக நியமித்து ஏற்கெனவே ஆணையிடப்பட்டுள்ளது.

**கடந்த சில தினங்களாக சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் அதிக அளவில் மழை பெய்துள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் பருவமழையால் பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளில் போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து, துரிதப்படுத்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கீழ்க்கண்டவாறு நியமிக்கப்பட்டுள்ளார்கள்:**

| | |
|---|---|
| மண்டலம் – 1 | மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்<br>மாண்புமிகு கதர் மற்றும் கிராமத்தொழில் வாரியத் துறை அமைச்சர் |
| மண்டலம் – 2 | மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்<br>மாண்புமிகு இந்து சமயம் மற்றும்அறநிலையத் துறை அமைச்சர் |
| மண்டலம் – 3 | மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்<br>மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் |
| மண்டலம் – 4 | மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்<br>மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்<br>மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் |
| மண்டலம் – 5 | மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சர்<br>மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் |
| மண்டலம் – 6 | மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சர்<br>மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர்<br>மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் |
| மண்டலம் – 7 | மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத்துறை அமைச்சர்<br>மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் |
| மண்டலம் – 8 | மாண்புமிகு வனத்துறை அமைச்சர்<br>மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் |

| | |
|---|---|
| மண்டலம் – 9 | மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறைஅமைச்சர்<br>மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் |
| மண்டலம் – 10 | மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறைஅமைச்சர்<br>மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை அமைச்சர் |
| மண்டலம் – 11 | மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்<br>மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் |
| மண்டலம் – 12 | மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்<br>மாண்புமிகு பால்வளம் மற்றும் பால்பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்<br>மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் |
| மண்டலம் – 13 | மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்<br>மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் |
| மண்டலம் – 14 | மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர்<br>மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்<br>மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் |
| மண்டலம் – 15 | மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர்<br>மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் |
| காஞ்சிபுரம் மாவட்டம் | மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் |

**மழைநீர் புகாத வண்ணம் தெருவோர மின்சார பகிர்மான பெட்டிகளை நல்லமுறையில் பராமரித்து அவற்றை உயரத்தில் அமைக்க வேண்டும் எனவும், தண்ணீர் தேங்கும் பகுதிகளில் கூடுதல் மின் மோட்டார்களை பயன்படுத்தி தண்ணீரை விரைவாக வெளியேற்ற வேண்டும் எனவும், தண்ணீர் விரைவாக வெளியேறாத பகுதிகளை உடனடியாக கண்டறிந்து அதனை வெளியேற்றுவதற்கான பணிகளை மேற்கொள்ள**

**வேண்டும் எனவும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுகாதாரத் துறை மூலம் மருத்துவ முகாம்களை நடத்தி, தொற்று நோய்கள் ஏற்படாத வண்ணம் அப்பகுதியை சுத்தம் செய்து பிளிச்சிங் பவுடர் தெளிக்க வேண்டும் எனவும், அதிகாரிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.**

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி. சீனிவாசன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.பி. தங்கமணி, மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் முனைவர் கொ. சத்யகோபால், இ.ஆ.ப., பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் திரு. எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு. ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., வருவாய்த் துறை செயலாளர் திரு. பி. சந்தரமோகன், இ.ஆ.ப., தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் எம். சாய்குமார், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் திரு.கே. பாஸ்கரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 2.11.2017**